# சென்னையில் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்.

## கோவை முதலியார் தலைமை வகித்தார்.

### பாரதியார் வீர முழக்கம்.

சென்னை, அக். 25

நேற்று மாலை 5-மணிக்கு மயிலாப்பூர் தெற்கு மாட வீதி வன்னியர் சத்திரத்தில் கோவை வக்கீல் ஸி. கெ. சுப்பிரமணிய முதலியார் தலைமையில் ஒரு ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. பல பிரபல தலைவர்களும் தமிழர்களும் கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள்.

தலைவர் முன்னுரை.

முன்னுரையாக தலைவர்பேசியதாவது;- ஹிந்தியை கட்டாய பாடமாக்குவதைக் கண்டிக்க நாம் இங்கு கூடியிருக்கிறோம். ஹிந்தி பயிற்சிக்கு 3 காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று இந்தியருக்குள் ஒற்றுமையை உண்டாக்குவது. 2-வது தென்னிந்தியர்களுக்கு வட இந்தியப் பிரயாணம் செய்ய வசதியளிப்பது. 3-வது ஹிந்தி பயிற்சியினால் தமிழர்களை வீரர்களாக்குவது.

அம் மூன்று காரணங்களையும் நாம் ஆராய்வோம். இந்தியாவிலே சென்னை மாகாணத்திற்றான் காங்கரஸ்காரருக்கு அதிக வெற்றி கிடைத்தது. அசம்பிளியில் 160 காங்கரஸ்காரர்களைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்கள் ஹிந்தி படித்தவர்களல்ல. ஹிந்தி படிக்காதிருக்கையிலேயே தென்னிந்தியர்கள் ஒற்றுமையாக காங்கரஸ்காரர்களைத் தேர்ந்தெடுத்திருக்கும்போது ஹிந்தி படித்தால் தான் ஒற்றுமையுண்டாகும் என்பதற்குப் பொருளுண்டா?

நாம் 150 வருஷமாக இங்லீஷ் படித்து வந்தும் இங்லீஷ் படித்தவர்கள் தொகை 100க்கு 2½ ஆகத்தான் இருக்கிறது. ஆகவே இப்பொழுதிருந்தே ஹிந்திபடிக்கத்தொடங்கினாலும் எல்லாரும் ஹிந்தி பயிற்சிபெற எத்தனை வருஷம் பிடிக்கும்? பொது மொழியினால் தேசியம் விருத்தியடையுமென்று கூறப்படுகிறது. தேசிய வளர்ச்சிக்கு பாஷை அவசியமில்லை. நாம் ஒரே அரசியலின் கீழ் இருந்ததினாற்றான் தேசியம் விருத்தியடைந்தது. தாய் மொழியை இழந்தால் ஒரு நாளும் ஒற்றுமை ஏற்படாது. வடநாட்டுப் பிரயாணத்துக்கு ஹிந்தி அவசியம் என்றும் ஏற்படாது. ஹிந்தி தெரியாதவர்கள் அநேகர் வடநாட்டுப் பிரயாணம் செய்துதான் வருகிறார்கள்.

பண்டைக் காலத் தமிழ்நாட்டு வீரர்கள் ஹிந்தியறிந்தவர்களல்ல. வீரத்துக்கும் ஹிந்திக்கும் சம்பந்தமே இல்லை. வீரம் எல்லா மொழியாளருக்கும் பொது.

யாவரும் மூன்று மொழிகள் படிக்க வேண்டுமென்று முதன் மந்திரியார் சொல்லுகிறார். மூன்று மொழி எப்படிப் படிக்க முடியும்? ஹிந்தி கட்டாய பாடமானால் தமிழ்ப் பயிற்சி குறையத்தான் செய்யும். கோயப்புத்தூரில் கவர்னர் விஜயம் செய்தபோது நாங்கள் இதைப்பற்றி முறையிடப் பேட்டி காண விரும்பினோம். மந்திரிமார் தமிழைக் காப்பதாக வாக்களித் திருப்பதினால் பேட்டி யளிப்பதினால் பயனில்லை என்று கவர்னர் கூறிவிட்டார்.

சோமசுந்தர பாரதியார்

அப்பால் பேசியதாவது:—

"35-ஆண்டுகளாக நான் காங்கரஸ் வாதியாக இருக்கிறேன். ஆனால் காங்கரஸ் செய்கிற எல்லா நடவடிக்கைகளையும் ஒத்துக் கொள்ள மாட்டேன். குடியை நிறுத்தி விட்டால் தான் தாம் ஆச்சாரியார் என்று கனம் முதல் மந்திரி சொல்லிக் கொள்கிறாராம். இதுவரையில் தோன்றிய ஆச்சாரியார்கள் தாமாக ஆச்சாரிய பட்டம் சூட்டிக்கொள்ளவில்லை. மற்றவர்கள்தான் அவர்களுக்கு ஆச்சாரியார் பட்டமளித்தார்கள். தாமாகப் பட்டம் சூட்டிக்கொள்ளும் மமதையும் எங்கும் காண முடியாது. மந்திரிகளுக்கு மனுக் கொடுத்து நாம் ஹிந்தியை ஒழிக்கப் போவதில்லை. நமது சுயவலியினாலேயே ஹிந்தியை ஒழிக்க வேண்டும். தெலுங்கரும் கன்னடரும், மலையாளரும் ஹிந்தியை எதிர்ப்பதில்லையெனக் கூறப்படுவது பொய். அவர்களும் எதிர்க்கிறார்கள். ஆனால் எதிர்ப்புச் செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிடுவதில்லை.

நம்மவர்கள் மடையர்கள் என்று ஆச்சாரியார் சொல்லுகிறார். அவரிடம் முறையிட்டுப்பயனில்லை. மயிலே மயிலே இறகு போடு என்றால் போடாது. அதே போல் நமது வலியை உபயோகித்தால் தான் ஹிந்தியைத் தடுக்க முடியும்.

நாம் ஹிந்தி படிக்கா விட்டால் நம்மை வட நாட்டார் வானர சேனையென்று கூறுவார்கள் என்று ஆச்சாரியார் கூறுகிறார். அவர் ஒரு உண்மை வைஷ்ணவராக இருந்தால் அப்படிச் சொல்ல மாட்டார். ராமனுக்கு உதவி செய்தது வானர சேனை தானே. ராமனுக்கு உதவி செய்த வானர சேனயை ஒரு வைஷ்ணவன் கேவலமாகக் கூறலாமா? சென்ற அசம்பளித் தேர்தலில் காங்கரஸ் வணங்கியது ஹநுமானைத்தானே. ஹநுமான் படத்தைக் காட்டி தேர்தல் நடத்தச் சொன்னதும் ஆச்சாரியார் தானே.

ஹிந்தி நல்ல மொழி; அழகான மொழி என ஆச்சாரியார் சொல்லுகிறார். நல்ல சாமானுக்குத் தரகர்கள் அவசியமில்லையே! ஹிந்தி நல்ல மொழியானால் எல்லாரும் வலியப் படிப்பார்களே. ஏன் கட்டாய பாடமாக்க வேண்டும்? சட்டம் செய்ய வேண்டும்? கோயம்புத்தூர்க்காரர் கவர்னரிடம் முறையிடப் போனது சரியல்ல. ஹிந்தியை எத்தனையோ பிராமணர்களும் எதிர்க்கிறார்கள். ஆனால் வெளிப்படையாக அவர்கள் எதுவும் சொல்வதில்லை. நம்மவர்களிலும் சில விபீஷணர்கள் இருந்து கொண்டு நம்மைக் காட்டிக் கொடுக்கிறார்கள். அந்த விபீஷணர்களையும் நாம் அப்புறப்படுத்த வேண்டும்

ஹிந்தியை விரும்பாதவர்கள் அடுத்த தேர்தலில் எங்களுக்கு வோட்டளிக்க வேண்டாமென்று ஆச்சாரியார் சொல்லுகிறார். அதுவரை நாம் என்ன செய்வது? காந்தி கற்பித்த ஒத்துழையாமையைத்தான் மேற்கொள்ள வேண்டும். ஹிந்தியை ஆதரிப்பவர்களுடன் நாம் ஒத்துழைக்கக் கூடாது. அவர்கள் நிலங்களை நாம் பயிர் செய்யக் கூடாது. வடகலை அய்யங்கார்களே பயிர் செய்யட்டும். நானும் ஆச்சாரியாரைப் போல ஒரு லாயர்தான். ஹிந்தியால் தமிழுக்குத்தீங்கு நேருமென்பது எனக்குத் தெரியும்.

காங்கரஸ் ஆதிக்கம் பெற்ற மற்ற மாகாணங்களில் இவர்கள் ஹிந்தியை கட்டாய பாடமாக்காமல் இம்மாகாணத்தில் மட்டும் ஏன் செய்யவேண்டும்?

திருச்சி கலிபுல்லா மகம்மதியர் தேவ நகரி எழுத்து படிக்க முடியாது என்ற உடன் ஆச்சாரியார் மகம்மதியரை அவர்கள் போக்கில் விட்டுவிடுவதாய்சொல்லிவிட்டார். நம்மை மட்டும் ஏன் தொந்தரவு செய்யவேண்டும்? நமது பலத்தை உபயோகித்தாலொழிய ஹிந்தி சங்கடம் நீங்காது.

இன்னும் முதன் மந்திரியார் ஹிந்தியை கட்டாய பாடமாக்குவதானால் அவரை முதன்மந்திரி பதவியிலிருந்து இறக்கவேண்டியது தான். நாம் பார்ப்பனருக்கு வெட்டிச்சோறு போட்டது தான் இவ்வளவுக்கும் காரணம். நமது தமிழர் ஆக்கத்தை நிலைநிறுத்தவேண்டும். ஆச்சாரியார் நம்மை மேல்நாட்டார் அடிமைத்தனத்திலிருந்து நீக்குவதாய்ச் சொல்லி நம்மை வட இந்திருக்கு அடிமையாக்கத் திரிகிறார். ஆனால் நாம் ஒருவருக்கும் எக்காலத்தில் எக்காரியத்திலும் அடிமையாய் இருக்கக்கூடாது. சுப்பிரமணியபாரதியாரே "பார்ப்பாரை ஐயரென்ற காலமும் போச்சே" என்று எழுதியிருக்கிறார். நம்மைவிட பார்ப்பாரை மேலென்று நினைக்கவே கூடாது.

காங்கரஸ் பத்திரிகையிலொன்றாகிய ஒரு விகடக் குரங்கு பெரும்பான்மையோர் சொல்லுவதை சிறுபான்மையோர் கேட்கவேண்டுமென்று சொல்லுகிறது. இது சரியானால் பெரும்பான்மையோர் முதல் மந்திரியை கடலில் விழச் சொன்னால் அவர் கடலில் விழுவாரா? இல்லையேல் ஆச்சாரியாருக்கு ஒருவழக்கு நமக்கு ஒரு வழக்கா? "தினமணி" சொக்கலிங்கம் தன்னைப் பெரிய தமிழனென்று நினைத்து கண்டபடி பிதற்றுகிறார். ஆனால் "தினமணி" சொக்கலிங்கத்துக்கு தமிழில் ஒன்றும் தெரியாதென்றே நான் சொல்லுகிறேன். போலீஸ்காரர் உங்களை தொந்தரவு செய்ய வந்தால் அவர்களிடம் "நேற்று வரை ஜஸ்டிஸ் கட்சிதான் இருந்தது. நாளைக்கு ஜஸ்டிஸ் கட்சி வந்தால் என்ன செய்வாய்?" என்று கேளுங்கள். நாம் வட இந்தியரை பின்பற்றமுயன்றால் ஹிந்தி படித்து பூணூல் போடவேண்டும். அல்லது தமிழ் கொடியை நாட்ட விரும்பினால் பூணூல் போட்டிருப்பவர்கள் பூணூலை அறுத்தெரிந்து விட்டு நம் தமிழர் ஆதிக்கத்தை நிலை நிறுத்த வேண்டும்"

அதற்கப்புறம் சற்குணரும், கே. எம். பாலசுப்பிரமணியமும் பேசினார்கள். டி. எ. வி. நாதன் அவர்கள் ஹிந்தியை கட்டாய பாடமாக்கக்கூடாதென்றும், தமிழைக் கட்டாயப்பாடமாக்கவேண்டுமென்றும் ஹிந்தியைப் பிரியப்பாடமாகக்கூட வைக்கக்கூடாதென்றும் தீர்மானம் கொண்டு வந்தார். தீர்மானம் ஏகமனதாய் ஒத்துக் கொள்ளப்பட்டது. தலைவர் முடிவுரையோடு கூட்டம் முடிவுற்றது.

---

## தென்னாலி வக்கில் சங்கக் கூட்டம்.

### கடன் நிலை மசோதாவுக்கு எதிர்ப்பு.

(ஒரு நிருபர்)

தென்னாலி, அக். 23

தென்னாலி வக்கில் சங்கத்தார் கூட்டத்தில் நீதி—நிர்வாக இலாக்காக்கள் பிரிவினையைக் குறித்து பிரதம மந்திரி கூறியதைக் கண்டித்தும், வக்கில் தொழிலைக் குறை கூறிய அவரது செயலைக் கண்டித்தும் கடன்நிலை மசோதாவை எதிர்த்தும் தீர்மானங்கள் நிறைவேறின.